

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நேற்று (15.5.2023) செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கத்தில் ரூ.393.74 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் புதிய புறநகர் பேருந்து முனையத்தின் இறுதிக்கட்டப் பணிகளை சென்னைப் பெருநகர வளர்ச்சி குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டார். இந்த ஆய்வின்போது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, தாம்பரம் மாநகர காவல் ஆணையாளர் முனைவர் அ.அமல்ராஜ், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, போக்குவரத்து ஆணையர் இல.நிர்மல்ராஜ், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் ராகுல் நாத், செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் திருமதி.வரலட்சுமி மதுசூதனன், தாம்பரம் மாநகர காவல் கூடுதல் ஆணையாளர் (போக்குவரத்து) திருமதி.ந.காமினி, காவல் இணை ஆணையாளர் முனைவர். பா.மூர்த்தி, காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவர் திருமதி.உதயா கருணாகரன், தலைமைத் திட்ட அமைப்பாளர்கள், காவல்துறை, வருவாய்துறை, நெடுஞ்சாலைத்துறை, போக்குவரத்துத்துறை மற்றும் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

### கிளாம்பாக்கம் புதிய பேருந்து நிலைய முனையத்தில்

# போக்குவரத்து நெரிசலின்றி பேருந்துகளை இயக்க ஆலோசனை!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு பங்கேற்றார்

சென்னை, மே 16 -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நேற்று (15-5-2023) செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கத்தில் ரூ.393.74 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் புதிய புறநகர் பேருந்து முனையத்திலிருந்து, ஜி.எஸ்.டி. சாலை வழியாக போக்குவரத்து நெரிசலின்றி பேருந்துகளை இயக்குவது தொடர்பாகவும், தென் மாவட்ட பேருந்துகள் செல்ல மாற்று வழித்தடங்கள் அமைப்பது தொடர்பாகவும் சென்னைப் பெருநகர வளர்ச்சி குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் காவல்துறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் போக்குவரத்துத் துறையுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அதனை தொடர்ந்து காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், சென்னை வெளிவட்ட சாலை, வரதராஜபுரத்தில் தனியார் ஆம்னி பேருந்துகள் நிறுத்துவதற்கான இடத்தினை (Omni Bus Idle Parking) நேரில் சென்று கள ஆய்வு மேற்கொண்டார்.

அதுபோது அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்ததாவது :

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கிளாம்பாக்கத்தில் ரூ.393.74 கோடி மதிப்பீட்டில் நவீன தொழில் நுட்ப வசதிகளுடன் அமைக்கப்பட்டு வரும் புதிய புறநகர் பேருந்து முனையம் "கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்" எனும் பெயரில் மக்கள் பயன்பாட்டிற்காக வருகின்ற ஜூன் மாதம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்படும்.

கிளாம்பாக்கம் புதிய புறநகர் பேருந்து முனையத்தின் முடிவுற்றப் பணிகள் தொடர்பாக 15-5-2023 அன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், இம்முனையத்திலிருந்து ஜி.எஸ்.டி. சாலை வழியாக போக்குவரத்து நெரிசலின்றி பேருந்துகளை இயக்குவது தொடர்பாகவும், தென்மாவட்ட பேருந்துகள் செல்ல மாற்று வழித் தடங்கள் அமைப்பது தொடர்பாகவும் தாம்பரம் மாநகர காவல் ஆணையாளர் அவர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கூடுவாஞ்சேரியில் ரவுண்டானா அமைப்பது தொடர்பாகவும், கூடுவாஞ்சேரி, மாடம்பாக்கம் சாலை முதல் மண்ணிவாக்கம் வரை 7 கிலோ மீட்டர் நீளத்திற்கும், கண்டிகை முதல் கூடுவாஞ்சேரி வரை 18 கிலோ மீட்டர் நீளத்திற்கும், நல்லம்பாக்கம் முதல் ஊரப்பாக்கம் ஜிஎஸ்டி சாலை வரை 10 கிலோ மீட்டர் நீளத்திற்கும் சாலைகளை அகலப்படுத்துவது தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து, காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், சென்னை வெளிவட்ட சாலை, வரதராஜபுரத்தில் அமையுள்ள தனியார் ஆம்னி பேருந்துகள் நிறுத்துமிடம் (Omni Bus Idle Parking) இடம் தேர்வு செய்வதற்காக கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின் போது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, தாம்பரம் மாநகர காவல் ஆணையாளர் முனைவர் அ.அமல்ராஜ், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, போக்குவரத்து ஆணையர் இல.நிர்மல்ராஜ், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் ராகுல் நாத், செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் திருமதி. வரலட்சுமி மதுசூதனன் தாம்பரம் மாநகர காவல் கூடுதல் ஆணையாளர் (போக்குவரத்து) ந. காமினி, காவல் இணை ஆணையாளர் முனைவர். பா.மூர்த்தி, காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் உதயா கருணாகரன், தலைமைத் திட்ட அமைப்பாளர்கள், காவல்துறை, வருவாய் துறை, நெடுஞ்சாலைத் துறை, போக்குவரத்துத் துறை மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# வணிகவரி கோட்ட இணை ஆணையர்கள் ஆய்வுக் கூட்டம்!

## வணிகவரி - பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நடைபெற்றது!

சென்னை, மே.16-

வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி. மூர்த்தி தலைமையில் நேற்று (15.05.2023) சென்னை, நந்தனம், ஒருங்கிணைந்த வணிகவரி மற்றும் பதிவுத் துறை வளாக கூட்டரங்கில் வணிகவரி கோட்ட இணை ஆணையர்களின் பணித்திறன் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

வணிகவரித் துறையில் கடந்த 2022-2023 நிதியாண்டில் ரூ.1,33,541 கோடி வருவாய் ஈட்டப்பட்டது. இது 2021-2022 நிதியாண்டில் பெறப்பட்டதை விட ரூ.28,448 கோடி வருவாய் கூடுதலாகும்.

இக்கூட்டத்தில் வருவாய் இலக்கு, மாத நமுனா தவிர பிற இனங்கள் மூலம் ஈட்டப்பட்ட வரிவருவாய் மற்றும் மாத நமுனாவிற்கு ஏற்றவாறு கேட்புகள் (Demand) எழுப்பப்பட்டதன் மூலம் கூடுதலான வரி வருவாய் ஈட்டுவதற்கு பங்களித்த கூடுதல் ஆணையர்கள், இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள் மற்றும் மாநில வரி அலுவலர்கள் உள்ளிட்ட 60 உயர் அலுவலர்களுக்கு பாராட்டு சான்றிதழ்கள் அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அரசு செயலாளர், திருமதி.பா. ஜோதி நிர்மலாசாமி, முதன்மைச் செயலாளர் / வணிகவரி ஆணையர் தீரஜ் குமார், வணிகவரி இணை ஆணையர் (நிர்வாகம்) திருமதி. மா.செள.சங்கீதா மற்றும் வணிகவரித் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### எழும்பூர் தெற்குப் பகுதி

# 108 - 108 'அ' வட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம்!

## எல்.சுந்தர் ராஜன் எம்.சி. - வான்மதி கதிரவன் அறிவிப்பு!

சென்னை,மே.16

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் தெற்குப் பகுதி 108, 108 அ வட்டக் கழகச் செயல்வீரர்கள் கூட்டம் இன்று (16.05.2023) நடைபெறுகிறது. இதுகுறித்து வட்டச் செயலாளர்கள் எல்.சுந்தர்ராஜன் எம்.சி., வான்மதி கதிரவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆலோசனைபடி சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் தெற்குப் பகுதி 108- 108 'அ' வட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம் இன்று (16.05.2023) மாலை 6 மணியளவில் வ.உ.சி. மன்றத்தில் பகுதி அவைத் தலைவர் எஸ். ரசூல் தலைமையில் பகுதிச் செயலாளர் வி.சுதாகர், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கே.எஸ். எம். நாதன், நிர்மலா தேவி முன்னிலையில் நடைபெறுகிறது.

இதில் 108, 108 'அ' வட்டத்திற்குட்பட்ட பகுதி துணைச் செயலாளர் டி.வி. வேலு, பகுதி நிர்வாகிகள் எம்.மலர்மாறன், கே.அன்னபூரணி, எஸ்.ஜெகதீசன், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள் பி.எல்.ஏ.-2 உள்ளிட்ட கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் காஞ்சிபுரம் வடக்கு ஒன்றியம் திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க பொதுக் கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர், தலைமை கழக பேச்சாளர் வி.பி.கலைராஜன் சிறப்புரையாற்றினர். காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன், ஒன்றிய செயலாளர் பி.எம்.குமார், காஞ்சிபுரம் ஒன்றிய குழு பெருந்தலைவர் திருமதி மலர்கொடி குமார் உள்ளிட்ட ஒன்றிய நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# மெக்சிகோவில் சாலை விபத்தில் 26 பேர் பலி!

மெக்சிகோ,மே.16-

மெக்சிகோவில் வேனும் டிரக்கின் டிரெய்லரும் மோதியதில் 26 பேர் பலியானார்கள். மெக்சிகோவின் சியுடாட் விக்டோரியா நெடுஞ் சாலையில் வேனும் டிரக்கின் டிரெய்லரும் மோதி விபத்துக்குள்ளானது. இதில் மோதிய வேகத்தில் இரண்டு வாகனங்களும் தீப்பிடித்து எரிந்தது.

இந்த சம்பவத்தில் 26 பேர் பலியானார்கள். நிகழ்விடத்துக்கு விரைந்த காவல்துறையினர் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். சம்பவ இடத்தில் இருந்து தேசிய அடையாள அட்டைகள் மீட்கப்பட்டுள்ளதால், பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் மெக்சிகோவை சேர்ந்தவர்கள் என கருதப்படுகிறது. விபத்தைத் தொடர்ந்து டிரெய்லரை ஏற்றிச் சென்ற டிரக் அந்த இடத்தில் இல்லை.

டிரக்கின் ஓட்டுநர் தப்பியோடினாரா அல்லது விபத்தில் அவரும் பலியானாரா என்பது குறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

### தி.மு.க. சுற்றுச்சூழல் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## சுற்றுச்சூழல் அணிச் செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி அறிவிப்பு!

**கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. சுற்றுச்சூழல் அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.**

**சென்னை வடகிழக்கு மாவட்டம்**

**அமைப்பாளர்** - பி.வெங்கடேசன், 144, திருவள்ளுவர் தெரு, சின்ன சேக்காடு, மணலி, சென்னை-600 068.

**துணை அமைப்பாளர்கள்** - பா.பாலஉமாபதி, 71/6, மீனாட்சி நகர், வடக்கு மாட வீதி, திருவொற்றியூர், சென்னை-19., ச. இளஞ்செழியன், 19/88, பேங்க் காலனி, 3வது தெரு, மாதவரம் பால் பண்ணை, சென்னை-51., த. சுதர்சன், 3/9, ரத்தினம் தெரு, சின்னசேக்காடு, மணலி, சென்னை-68., ஏகா.கார்த்திகேயன், 35/40, புதிய காலனி, தாங்கல் திருவொற்றியூர், சென்னை-600019., வேதா. செந்தில்குமார், 3/1119, பாலவேடு காந்தி நகர், பாலவேடு அஞ்சல் - வழி, ஆவடி ஐசிஎப்., சென்னை.

**சென்னை வடக்கு மாவட்டம்**

**அமைப்பாளர்** - மோ. தீனதயாளன், பழைய எண்.19/....., புதிய எண்.18/2, ஆதம் தெரு, இராயபுரம், சென்னை-600013.

**துணை அமைப்பாளர்கள்** - ஜெ.வசந்தகுமார், 89, டி-பிளாக், ரங்கநாதபுரம், கொருக்குப்பேட்டை, சென்னை-600 039., வே.கிருஷ்ணராஜ், 4/18, குமாரசாமி சந்து, இராயபுரம், சென்னை-600 013., இரா.வேதநாயகம், 9, பாலு தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை-600 021., கே.ஆனந்த், 89/3, 6வது தெரு, கருணாநிதி சாலை, சர்மா நகர், சென்னை-600 039., கு. சிவதனுஷ், 8/14, காமராஜ் பூங்கா தெரு, இராயபுரம், சென்னை-600 013.

**சென்னை கிழக்கு மாவட்டம்**

**அமைப்பாளர்** - க.வி.நாகவள்ளி பிரபாகரன், 16-டி, ஐசிசி, வடக்கு பிரதான சாலை, அண்ணாநகர் மேற்கு விரிவாக்கம், சென்னை-600 101.

**துணை அமைப்பாளர்கள்** - பட்டாளம் ம.செந்தில்குமார், 4/22, தேவராஜ தெரு, பட்டாளம், சென்னை-600 012., விஜய் ராதாகிருஷ்ணன், 10/19, லேகேஷ் எக்கிளேவ், கிளப் சாலை, சேத்துப்பட்டு, சென்னை-600 031., ஜே. ஜாவித்கான், 55/65, ரெங்கதாஸ் காலனி, 3வது தெரு, வில்லிவாக்கம், சென்னை-600 049., ராமாபுரம் வே.ராஜேஷ், 3/87, வள்ளுவர் சாலை, இராமாபுரம், சென்னை-600 089.

**சென்னை தெற்கு மாவட்டம்**

**அமைப்பாளர்** - ஆர். சாம்நவீன், 1/69, ஈஸ்வரன் கோவில் தெரு, மடிப்பாக்கம், சென்னை - 600 021.

துணை அமைப்பாளர்கள் - தே. அறிவுடைநம்பி, 4, ஹரிவரதன் தெரு, சந்தோஷ் நகர், கந்தன்சாவடி, சென்னை-600 096. வெ. தினேஷ், 9, செட்டித் தெரு, போரூர், சென்னை-600 116. வே. சீனிவாசன், 9, கங்கையம்மன் கோவில் தெரு, சீதேவிகுப்பம், வளசரவாக்கம், சென்னை-600 096. நா. சுரேஷ்கண்ணன், 17/4, எம்.ஜி. ஆர்.சாலை, திருவள்ளுவர் நகர், பெருங்குடி, சென்னை-600 096.

**சென்னை மேற்கு மாவட்டம்**

**அமைப்பாளர்** - பா.சுந்தரராமன், டைமண்ட கேட், 37, அபிபுல்லா சாலை, தியாகராயர் நகர், சென்னை - 600 017.

**துணை அமைப்பாளர்கள்** - வீ. ராமகிருஷ்ணன், 8/17, புஷ்பா நகர், நுங்கம்பாக்கம், சென்னை-60017. இரா. குமரேசன், சி-17, திரு.வி.க.காலனி, அண்ணாநகர் கிழக்கு, சென்னை-600102. நே.திருமாறன், 118, முத்தையா தெரு, தேனாம்பேட்டை, சென்னை-600 018.

**சென்னை தென்மேற்கு மாவட்டம்**

**அமைப்பாளர்** - என்.எஸ்.பாலசுப்பிரமணியன், 15/6, தரண்சிங் காலனி, 1வது தெரு, வடபழனி, சென்னை - 600 026.

**துணை அமைப்பாளர்கள்** - மு. வேல்ராஜன், 47/49, அப்துல் அசிஸ் தெரு, 301, ஸ்கந்தா பிளாட்ஸ், தியாகராயர் நகர், சென்னை - 600 017. உ. யுவராஜ், 47/44, கோத்தி கார்டன், 3வது தளம், ராஜீ தெரு, மேற்கு மாம்பலம், சென்னை-600033. எம்.வடிவேலு, 72/டி, புதிய எண்.1, 57வது தெரு, அசோக் நகர், சென்னை - 600 083. கோ. வெங்கட்ராமன், 316, கணேஷ் அவென்யூ, என்ஜிஓ காலனி, வடபழனி, சென்னை-600026.

**திருவள்ளூர் கிழக்கு மாவட்டம்**

**அமைப்பாளர்** - மு. பாஸ்கரன், 16, பஜனை கோவில் தெரு, தம்புரெட்டிபாளையம் தேர் வழி, கும்முடிப்பூண்டி, திருவள்ளூர் மாவட்டம்.

**துணை அமைப்பாளர்கள்** - சி. விக்ரமன் 1/14, பெருமாள் கோவில் தெரு, அருமந்தை கூட்டு சாலை, புதூர், சென்னை - 600 067. ஆர். விஜய பிரசாந்த் 27, மேட்டுத் தெரு, சின்ன செங்காத்தகுளம், வடமதுரை, ஊத்துக்கோட்டை, திருவள்ளூர் மாவட்டம். ரெ. ராஜாராம், 10, மகாத்மா காந்தி தெரு, தாங்கல் பஞ்செட்டி கிராமம், பொன்னேரி, சென்னை-601 204. ஏ. ரஜினி, 48, பெருமாள் கோவில் தெரு, புதுப்பேடு, மீஞ்சூர் - 601 203. யோகேஷ்வரன் (எ) யோகி, 7, அவ்வையார் தெரு, கே.ஜி.எல்.பிரபு நகர், பிடி ஆபிஸ், மீஞ்சூர் - 601 203.

**திருவள்ளூர் மத்திய மாவட்டம்**

**அமைப்பாளர்** - இ. ஜேக்கப், 101, இ-2, பிளாக், ஶ்ரீபதி நிலையம் அபார்ட்மெண்ட், 85, ஸ்கூல் ரோடு, அயனம்பாக்கம், சென்னை- 600 095.

**துணை அமைப்பாளர்கள்** - தினேஷ் ஆசைதம்பி, 56, இராமானுஜம் 6வது குறுக்கு தெரு, காந்தி நகர், ஆவடி, சென்னை-600 054. இரா. பிரபு, 35, ஆஞ்சநேயர் கோவில் தெரு, பூவிருந்தவல்லி, சென்னை - 600 056. நி. அசோக்குமார், 4, அம்மன் கோவில் தெரு, குமணன்சாவடி, பூவிருந்தவல்லி, சென்னை- 600 056. கோ. அரிகிருஷ்ணன், 1/1, துரோபதியம்மன் கோவில் தெரு, ஓதிக்காடு கிராமம், திருவள்ளூர் - 602 021. வி.பா. அனுவர்ஷினி, 8/1, ஜீவானந்தம் 4வது தெரு, குமரன் நகர், ஆவடி, சென்னை.

**திருவள்ளூர் மேற்கு மாவட்டம்**

**அமைப்பாளர்** - பூண்டி ம.செ.அருண்குமார், 1/8, சக்திகள் தெரு, பூண்டி கிராமம் & அஞ்சல், திருவள்ளூர் மாவட்டம்

**துணை அமைப்பாளர்கள்** - செ.சரத்குமார், 9, நாகலம்மன் கோவில் தெரு, முருகப்பா நகர், திருத்தணி - 631 209. த. சதிஷ், 568, ராதாகிருஷ்ணன் தெரு, பூண்டி, திருவள்ளூர் - 602 203. வா. அருண்குமார், 129, அய்யனார் அவென்யூ, ஆயில்மில், திருவள்ளூர் - 602 023. ரா. சுதர்சன், 19, இராமதண்டலம் கிராமம், புதிய தெரு, மொன்னவேடு அஞ்சல், திருவள்ளூர் மாவட்டம் - 602 020.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை-18.
நாள்: 14-05-2023

**கார்த்திகேய சிவசேனாபதி**
செயலாளர்
தி.மு.க. சுற்றுச்சூழல் அணி

### ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

# அறிவிப்புகள் - செயலாக்கம் குறித்த ஆய்வுக் கூட்டம்!

## அமைச்சர் கயல்விழி செல்வராஜ் தலைமை!

சென்னை, மே 16 -

சமூகத்தின் விளிம்பு நிலையில் இருக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் கல்வி, சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டில் மிகவும் அக்கறை உள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, நேற்று (15.05.2023) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் வெளியிடப்பட்ட பல்வேறு அறிவிப்புகள் மற்றும் அவற்றின் செயலாக்கம் குறித்த ஆய்வுக் கூட்டம் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் வெளியிடப்பட்ட பல்வேறு அறிவிப்புகள் குறித்து அமைச்சர் அவர்களால் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அரசாணை வெளிடப்பட்ட அறிவிப்புகளுக்கு முழு செயல் வடிவம் கொடுத்து இத்திட்டங்களின் பயன் மக்களை விரைந்து சென்றிடுவதை உறுதி செய்திடுமாறும், அரசாணை வெளியிடப்பட வேண்டிய அறிவிப்புகளுக்கு உரிய கருத்துருக்களை அரசின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்குமாறும் அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா, ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் த.ஆனந்த், தாட்கோ மேலாண்மை இயக்குநர் கே.எஸ்.கந்தசாமி, பழங்குடியினர் நல இயக்குநர் எஸ்.அண்ணாதுரை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# இராயபுரத்தில் புதிய பள்ளிக் கட்டிடங்கள் திறப்பு!

## ஐட்ரீம் ஆர். மூர்த்தி எம்.எல்.ஏ. மாணவர்களுக்கு இனிப்பு வழங்கினார்!

சென்னை, மே 16 -

திராவிட நாயகர், கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 12-05- 2023 அன்று இராயபுரம் சட்டமன்ற தொகுதி மணிகண்டன் தெரு /கல்லறை சாலையில், எல்.கே.ஜி. முதல் 10 ஆம் வகுப்புவரை தமிழ் மற்றும் ஆங்கிலம் வழியில் கல்வி கற்க ஏதுவாக ரூ.4.53 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள மாநகராட்சி பள்ளி கட்டிடத்தை திறந்து வைத்தார்.

மேலும் நேற்று (15-05-2023) ரூ.7 கோடி மதிப்பீட்டில் சுமார் இருநூறு மாணவியர்கள் தங்க ஏதுவாக அனைத்து வசதிகளுடன் கூடிய புதுப்பொலிவில் "அரசு ஆதி திராவிடர் மாணவியர் விடுதி" இரண்டு கட்டடங்கள் ஆகியவற்றை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமைச் செயலகத்தில் இருந்தவாறுக் காணொலி காட்சி மூலமாக திறந்து வைத்து சிறப்பித்தார்.

அதனைத் தொடர்ந்து இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா. மூர்த்தி , அப்பள்ளி மற்றும் விடுதிக்கு நேரில் சென்று பார்வையிட்டு மாணவர்களுக்கு இனிப்புகள் வழங்கி கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலன் அவர்களுக்கு இராயபுரம் தொகுதி மக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக் கொண்டார்.

இந்நிகழ்வில் இராயபுரம் பகுதிச் செயலாளர்கள் வ. பெ.சுரேஷ், இரா.செந்தில் குமார். பகுதி துணைச் செயலாளர், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்துகொண்டனர்.



திருவள்ளூர் மேற்கு மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் புட்லூர் குணசேகரன் மாரடைப்பு காரணமாக அண்மையில் இயற்கை எய்தினார். இந்த நிலையில் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் புட்லூரில் உள்ள அவரது இல்லத்திற்கு நேரில் சென்று குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். அருகில் திருவள்ளூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் ஆர். ஜெயசீலன், திருவள்ளூர் நகர கழகச் செயலாளர் சி.சு. ரவிச்சந்திரன், பூவிருந்தவல்லி நகரக் கழக செயலாளர் ஜி.ஆர்.திருமலை உள்பட கழக நிர்வாகிகள் உள்ளனர்.